# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,717 — 1966 ඔක්තෝබර් 14 වැනි සිකුරාද — 1966.10.14

14,717 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 277 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | 281 | வரவு செலவுத் திட்டங்கள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 285 | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | 285 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானுவித அறிவித்தல்கள் | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் குருநாகல் மாவட்டத்திலுள்ள தித்லிலைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு அப்பிரதேசத்தில் நிலவரி ஒன்றனை அப்பிரிவின்கீழ் விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் மூலம் அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆடு செப்டம்பர் மீ 20 ந் உ.

10-437—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள பலிந்தநுவரக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு அப்பிரிவின் கீழ் நிலவரி ஒன்றனை அக்கிராமப் பிரதேசத்தில் விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் மூலம் அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆடு செத்தெம்பர் மீ 15 ந் உ.

10-426—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆடு பெப்புருவரி மீ 1 ந் உ.

பேர்னுட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) உட்பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், குருநாகல் மாவட்டத்திலுள்ள கோக்கரல்லைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு, அப்பிரதேசத்தில் நிலவரி ஒன்றனை அப்பிரிவின் கீழ் விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந உ.

10–455—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## நாய் பதிவுக் கட்டளைச் சட்டம்

(477 ம் அத்தியாயமான) நாய் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவுக்கமைய உள்ளூராட்சி அமைச்சர் இட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 26 ந உ.

### கட்டளை

தங்கொட்டுவ பட்டினம் இத்தால் (477 ம் அத்தியாயமான) நாய் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அக்கட்டளைச் சட்டத்தின் பொருட்டு முன் சொல்லப்பட்ட பட்டினத்தின் எல்லைகள், 1963, மே 23 ன், 13,646 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2, 5, 6, 9 ஆகிய பிரிவுகளுக்கமைவாக இடப்பட்ட கட்டளையின் முதலாம் அட்டவணையில் விவரிக்கப்பட்ட தங்கொட்டுவ பட்டின சபையின் நிருவாக எல்லைகளாக இருக்கும்.

10–454—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

எல். டி.–பி. 196/38

எல். ஜி. டி.—ஜி. 328

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 49, 52 ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சராலாக்கப்பட்டு 1964 மே 29 ஆம் தேதிய 14,046 ஆம் இலக்கக் கசெற்றிற் வெளியிடப்பட்டதும், அதே கசெற்றில் அதன் சிங்களவாக்கமும், 1965 பெப்ரவாரி 19 ஆம் தேதிய 14,323 ஆம் இலக்கக் கசெற்றில் அதன் தமிழாக்கமும் வெளியிடப்பட்டுள்ளதுமான விதியானது பாராளுமன்ற மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1.10.1966.

10–467—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ், அதற்கான தக்க அதிகாரத்தாபனத்தால், அதாவது, கொழும்பு மாவட்டத்திலுள்ள மினுவாங்கொடைக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 15 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்கீழ் பிரசித்தப்படுத்தப்பட்ட பொது மிருகமறுப்புக்களம் சௌக்கியப் பொறுப்பு உத்தியோகத்தரின் அல்லது தலைவரால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் இருக்கும். அம்மிருகமறுப்புக்களத்தினுள் ஒழுக்கநடையும் சுகாதார நிலைமையும் நிலவுதற்கு அவ்வுத்தியோகத்தர் பொறுப்பாக இருப்பார்.

2. (1) எவரும்—

(அ) சௌக்கியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் அல்லது தலைவரால் அக்கருமத்துக்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அம்மிருகம் பரிசோதிக்கப்பட்டு, மனித பாவனைக்கு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) எத்தினத்திலும் மு. ப. 7.00 க்கும் மு. ப. 9.00 க்கு மிடையிலன்றி,

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுக்கலாகாது. ஆயினும் விசேடமான தருணங்களில் இதன்கண் நிச்சயிக்கப்பட்ட நேரமல்லாத வேறெந்த நேரத்திலும் எம்மிருகத்தையும் அறுப்பதற்குத் தலைவர் அதிகாரமளிக்கலாம்.

(2) எவரும்—

(அ) (1) ம் பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 72 மணித்தியால நேரம் காலாவதியான பின்னர் எந்நேரத்திலும் ; அல்லது

(ஆ) (1) ம் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது மிருகமறுப்புக்களத்திலிருந்து உயிருடன் வெளியே கொண்டுபோகப்பட்டிருப்பின் அது மீண்டும் பரிசோதிக்கப்பட்டு அப்பந்தியின் கீழ் மனித பாவனைக்கு அறுக்கப்பட ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுத்தலாகாது.

3. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம்மிருகத்துக்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்கச் செய்தற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

4. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றைக் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அப்படி நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அவ்வளவைவிட்டு அகற்ற வேண்டும் அல்லது அகற்றப்படச் செய்ய வேண்டும்.

5. ஒழுங்குவிதி 2 ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அது நோயுற்றது அல்லது மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் எவரும் எம்மிருகமும் அறுக்கப்படுவதைத் தடை செய்யலாம்.

6. அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுற்றது அல்லது மனித பாவனைக்கு உகந்த தல்ல என, ஒழுங்குவிதி 2 ல் குறிப்பிடப்பட்ட எவ்வுத்தியோகத்தரும் அபிப்பிராயப்பட்டால், அவர், அவ்விறைச்சியை அல்லது கழிவிறைச்சியை உடனடியாக அழித்தொழிக்கப்பட அல்லது அவ்விறைச்சி அல்லது அக்கழி விறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனித பாவனைக்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத்தக்கவகையில் அது அகற் றப்படச் செய்தல் வேண்டும்.

7. மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது ஒழுங்குவிதி 5 ன் கீழ் அதன் அறுப்பு தடை செய்யப்பட்டிருக்கும் எம்மிருகத்தையும் அறுப்பதற்கு அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோ கத்தர் அனுமதிக்கக்கூடாது.

8. (1) மனித பாவனைக்கு உகந்ததல்லவென 6 ம் ஒழுங்கு விதியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட எவ்விறச்சியையும் அல்லது எக்கழிவிறைச்சியை யும் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட எவ்வுத்தியோகத்தரினதும் ஆணையின்கீழன்றி அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியேற்றக் கூடாது.

(2) அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோகத்தரினால் சந்தர்ப்பத்துக் கேற்ப මීනුවන්ගොඩ ග.ස. எனும் குறியினாலும் "ගව මස්", "ඌරු මස්" அல்லது "එළු මස්" எனவும் அம்மிருக பிண்டத்தின் முன்பாகத்தில் முத்திரையிடப்பட்டாலன்றி, மனித பாவனைக்கெனவுள்ள எம்மிருகத்தின் பிண்டத்தையும் அறுப்புக்களத்திலிருந்து எவரும்வெளியே கொண்டு போகக்கூடாது.

9. எம்மிருகமும் வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது அவ்வளவில் முன்னர் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் பிண் டம் அகற்றப்பட்டு அல்லது திரைமறைவாக்கப்பட்டு அவ்வளவு சுத்த மாக்கப்படும்வரை அறுக்கப்படலாகாது.

10. ஒட்டுநோய், சருமநோய் அல்லது தொற்றுநோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீபத்தில் வருந்திய அல்லது அவ்வித நோய் எதனா லும் வருந்தும் எவருக்கும் சமீபத்தில் பணிவிடை செய்த எவரையும், நோய் தொற்றுங் காலமும், காப்புக்காலமும் கழியும்வரைக்கும், அம் மிருகமறுப்புக் களத்தினுள் பிரவேசிக்கவோ அல்லது எம்மிருகத்தையும் அறுப்பதில் பங்குபற்றவோ எந்த மிருகமறுப்புக் களத்தின் பொறுப்பு உத்தியோகத்தரும் அனுமதிக்கக்கூடாது.

11. (1) இதன் பின்னால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்கமைய, அறுப் புக்களத்தை உபயோகிப்பதற்கு அல்லது அறுப்பதற்கு அறவிடப்படும் கட்டணம் கீழ்க்காணும் விகிதத்தில் இருக்கும்—

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலைக்கு .. .. | 1 | 00 |
| ஒவ்வொரு செம்மறி ஆட்டுக்கும், பன்றிக்கும் அல்லது வெள் ளாட்டுக்கும் தலைக்கு .. .. .. | 1 | 00 |

ஆயினும், அறுப்புக்களத்தினுள் கொண்டு வரப்பட்ட மிருகமெதாவது அறுப்பதற்கு உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அல்லது அறுப்புக் களத்திலிருந்து திருப்பி எடுத்துச் செல்லப்பட்டால் அம்மிருகத்திற்காக அறவிடப்படும் கட்டணம் 50 சதமாகும்.

(2) (1) ம் பந்தியின்படியான உரிய கட்டணத்தை மிருகத்தின் பொருட் டுச் செலுத்தி அக்கட்டணத்தைச் செலுத்தியதற்கு ஆதாரமாகப் பெறப் பட்ட பற்றுச்சீட்டை, அறுப்புக்களப் பொறுப்பாளரிடம் அல்லது அப்பற் றுச்சீட்டைப் பார்வையிடுதற்கென்று தலைவரால் எழுத்தில் நியமிக்கப் பட்ட உத்தியோகத்தரிடம் காட்டினாலன்றி எம்மிருகத்தையும் அறுப்புக் களத்தினுள் அறுக்கவோ அங்கிருந்து அகற்றவோ கூடாது.

12. அறுப்புக்களப் பொறுப்பாளர்—

(அ) சகல மாடுகளுக்கும் ஒரு பதிவேட்டையும்,

(ஆ) அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட சகல வெள்ளாடுகள், செம்மறி யாடுகள், பன்றிகள், மாடுகள் ஆகியவற்றுக்கும் ஒரு பதிவேட் டையும் வைத்திருக்க வேண்டும். அப்பதிவேடு பொருளளவில் பின்வரும் வடிவத்திலிருக்க வேண்டும் :—

(அ.)

| மாட்டுச் சீட்டு இல. | விவரம் | நிறம் | வயது | குறிகள் | | இறைச்சிக் கடைக்கார ரின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | வலப் பக்கம் | இடப் பக்கம் | |
| | | | | | | |

(ஆ.)

| மாட்டுக் காலைக்கு வந்த நேரமும் திகதியும் | பரிசோ தித்த திகதி | அறுத்த திகதி | மாட்டைப் பெற் றுக் கொண்ட உத்தியோகத்த ரின் பெயர் முத லெழுத்து ஒப்பம் | குறிப்பு கள் |
|---|---|---|---|---|
| | | | | |

13. இவ்வொழுங்கு விதிகளில்—

"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" என்பது மினுவாங்கொடைக் கிராமச் சபை எனப் பொருள் படும்.

"கட்டளைச் சட்டம்" என்பது (272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

10-431—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகாரத்தாபனத்தால், அதாவது, கொழும்பு மாவட்டத்திலுள்ள பமுனுகம கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் உறுதிப்படுத்தப் பட்ட ஒழுங்கு விதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 15 ந் உ.

### ஒழுங்கு விதிகள்

1. இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்கீழ் பிரசித்தப்படுத்தப்பட்ட பொது மிருகமறுப்புக்களம் சௌக்கியப் பொறுப்பு உத்தியோகத்தரின் அல்லது தலைவரால் அதன்பொருட்டு அதிகார மளிக்கப்பட்ட பொதுச் சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் இருக்கும். அம்மிருக மறுப்புக்களத்தினுள் ஒழுக்கநடையும் சுகாதார நிலைமையும் நிலவுதற்கு அவ்வுத்தியோகத்தர் பொறுப்பாக இருப்பார்.

2. (1) எவரும்—

(அ) சௌக்கியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் அல்லது தலைவரால் அக்கருமத்துக்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அம் மிருகம் பரிசோதிக்கப்பட்டு, மனித உணவுக்கு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) எத்தினத்தினத்திலும் மு.ப. 7.00 க்கு மு.ப. 9.00 க்கு மிடையி லன்றி,

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுக்கலாகாது.

3. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம்மிருகத்துக்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்கச் செய்தற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

4. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றைக் கொண்டு வரும் ஒவ்வொருவரும், அம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அப்படித் நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அவ்வளவைவிட்டு அகற்ற வேண்டும். அல்லது அகற்றப்படச் செய்ய வேண்டும்.

5. ஒழுங்குவிதி 2 ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அது நோயுற்றது அல்லது மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் எவரும் எம்மிருகமும் அறுக்கப்படுவதைத் தடை செய்யலாம்.

6. அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுற்றது அல்லது மனிதபாவனைக்கு உகந்ததல்ல என, ஒழுங்குவிதி 2 ல் குறிப்பிடப்பட்ட எவ்வுத்தியோகத்தரும் அபிப்பிராயப்பட்டால், அவர், அவ்விறைச்சியை அல்லது கழிவிறைச்சியை உடனடியாக அழித்தொழிக்கப்படுவதற்கு அல்லது அவ்விறைச்சி அல்லது அக்கழிவிறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனித பாவனைக்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத்தக்க வகையில் அது அகற்றப்படச் செய்தல் வேண்டும்.

7. மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது ஒழுங்குவிதி 5 ன் கீழ் அதன் அறுப்புத்தடை செய்யப்பட்டிருக்கும் எம்மிருகத்தையும் அறுப்பதற்கு 2 ம் ஒழுங்கு விதியில் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் எவரும் அனுமதிக்கக்கூடாது.

8. (1) மனித பாவனைக்கு உகந்ததல்லவென 6 ம் ஒழுங்கு விதியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட எவ்விறைச்சியையும் அல்லது எக்கழிவிறைச்சியையும் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட எவ்வுத்தியோகத்தரினதும் ஆணையின் கீழன்றி அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியேற்றக் கூடாது.

(2) 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட ஒரு உத்தியோகத்தரினால் "பமு. ஒ. ஸ." எனும் குறியினால் அம்மிருக பிண்டத்தின் முன் பாகத்திலும் பின்பாகத்திலும் முத்திரையிடப்பட்டாலன்றி மனித பாவனைகெனவுள்ள எம்மிருகத்தினது பிண்டத்தை அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியே கொண்டு போகக்கூடாது.

(3) எம்மிருகத்தையும் வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது அவ்வளவில் முன்னர் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினது பிண்டமும் அகற்றப்பட்டு அல்லது திரைமறைவாக்கப்பட்டு அவ்வளவு சுத்தமாக்கப் படும்வரை அறுக்கப்படலாகாது.

9. ஒட்டுநோய், சருமநோய் அல்லது தொற்று நோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீபத்தில் வருந்திய அல்லது அவ்வித நோய் எதனாலும் வருந்தும் எவருக்கும் சமீபத்தில் பணிவிடை செய்தஎவரையும், நோய் தொற்றுங் காலமும், காப்புக்காலமும் கழியும்வரைக்கும், அம் மிருகமறுப்புக்களத்தினுள் பிரவேசிக்கவோ அல்லது எம்மிருகத்தையும் அறுப்பதில் பங்குபற்றவோ 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அனுமதிக்கக்கூடாது.

10. (1) இதன் பின்னால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்கமைய அறுப்புக்களத்தை அல்லது மாட்டுத் தொழுவத்தை உபயோகிப்பதற்கு அறவிடப் படும் கட்டணம் கீழ்க்காணும் விகிதத்தில் இருக்கும்—

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலைக்கு .. .. | 2 | 0 |
| ஒவ்வொரு செம்மறி ஆட்டுக்கும், அல்லது வெள்ளாட்டுக்கும் தலைக்கு .. .. .. | 1 | 0 |

ஆயினும், அறுப்புக்களத்தினுள் கொண்டு வரப்பட்ட மிருகமெதாவது அறுப்பதற்கு உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அல்லது அறுப்புக்களத்திலிருந்து திருப்பி எடுத்துச் செல்லப்பட்டால் அம்மிருகத்திற்காக அறவிடப்படும் கட்டணம் 50 சதமாக இருக்கும்.

(2) (1) ம் பந்தியின் படியான உரிய கட்டணத்தை மிருகத்தின் பொருட்டுச் செலுத்தி அக்கட்டணத்தைச் செலுத்தியதற்கு ஆதாரமாகப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் அல்லது அப்பற்றுச்சீட்டைப் பார்வையிடுதற்கென்று தலைவரால் எழுத்தில் நியமிக்கப்பட்ட ஆளிடம் காட்டினாலன்றி எம்மிருகத்தையும் அறுப்புக்களத்தினுள் அறுக்கவோ அங்கிருந்து அகற்றவோ கூடாது.

12. அறுப்புக்களப் பொறுப்பாளர்—

(அ) சகல மாடுகளுக்கும் ஒரு பதிவேட்டையும்,

(ஆ) அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட சகல வெள்ளாடுகள், செம்மறி யாடுகள், பன்றிகள், மாடுகள் ஆகியவற்றுக்கும் ஒரு பதிவேட்டையும் வைத்திருக்க வேண்டும். அப்பதிவேடு பொருளளவில் பின்வரும் வடிவத்திலிருக்க வேண்டும் :—

அ.

| மாட்டுச்சீட்டு இல. | விவரம் | நிறம் | வயது | குறிகள் | | இறைச்சிக் கடைக்காரரின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | வலப் பக்கம் | இடப் பக்கம் | |
| | | | | | | |

| மாட்டுக் காலைக்கு வந்த நேரமும் திகதியும் | பரிசோதித்த திகதி | அறுத்த திகதி | மாட்டைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தரின் பெயர் முதலெழுத்து ஒப்பம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| | | | | |

13. இவ்வொழுங்கு விதிகளில்—

"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" என்பது பமுனுகம கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை எனப் பொருள்படும்.

"கட்டளைச் சட்டம்" என்பது (272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம் எனப்பொருள்படும்.

10–425—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## கம்பொல நகரசபையின் எல்லைகள் நீடித்தலும், எல்லைப்படுத்தலும்

கம்பொல நகரசபையின் எல்லைகள் நீடித்தலும், எல்லைப்படுத்தலும் சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு கௌரவ உள்ளூராட்சி மந்திரி அவர்கள் தீர்மானம் செய்து, அத்தீர்மானத்திற்கு இணங்க, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஏ. ஓ. எஸ். திஸநாயக்கா அவர்களை அதிகாரியாக கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களை அறிவிக்குமாறு நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார் :

(அ) தற்பொழுது கம்பொல நகர சபை எல்லைக்கு வெளியில் உள்ள பிரதேசம், தேவைப்படின் அத்துடன் சேர்க்கப்பட வேண்டியவை :

(ஆ) பிரதேசம், குடிசனம், வேறு வழிகள் சம்பந்தமாக கம்பொல நகர சபையில் இருக்கவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ;

(இ) நகர சபை எல்லைகளின் வரையறை ;

(ஈ) இயன்றளவு, திடப்படுத்தக் கூடிய அளவிற்கு நகரசபையின் ஒவ்வொரு வட்டாரங்களினதும் எல்லைகளின் வரையறை, திருப்பி எல்லைப்படுத்தப்பட்டதும் ஒவ்வொரு வட்டாரங்களினதும் சம தொகையான வாக்குகள்.

2. சபையின் தொடர்பான நோக்கங்களுக்கு உள்பட, எல்லாவற்றிலும் அல்லது எதாவதொரு விடயங்களில் முறையீடு செய்ய விரும்பும் ஸ்தாபனங்களும், பொது சனங்களும் அவ்விதமே எழுத்துமூலம் செய்யலாமெனவும், அப்படிப்பட்ட எல்லா முறையீடுகளையும் 1966 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி கீழே கையொப்பம் இடப்பட்டவருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

3. எழுத்து மூலம் அனுப்பப்படும் முறையீடுகள், இரட்டைப் பிரதிகளைக் கொண்டதாகவும், ரைப்படிக்கப்பட்டதாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

4. வாய்மொழி முறையீடுகளை, 1966 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம், 5, 6, 7, ஆம் திகதிகளில் கம்பொல வாடி வீட்டில் (றெஸ்ற் கவ்ஸில்) சபை ஏற்றுக்கொள்ளும்.

5. மேலே கொடுக்கப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக வாய்மொழி முறையீடுகள் செய்ய விரும்புவோர், தங்களுடைய பெயர்களையும், விலாசங்களையும் கீழே கைபொப்பமிடப்பட்டவருக்கு 1966 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கொடுக்கப்பட வேண்டுமென தயவாக வேண்டப்படுகின்றனர். வாய்மொழி முறையீடு விசாரணை செய்யும் திகதிகள் கடிதமூலம் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

எல். எம். சமரசிங்க,
விசாரணை செய்யும் சபையின் செயலாளர்.

உள்ளூர் ஆட்சி அமைச்சு,
கண்டி செக்கிறட்டாறியட், கண்டி,
1966 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி.

10-588—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

# பதவிகள்—வெற்றிடம்

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச்சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறுபோதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கருமமொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

**(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்**

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்**

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில, விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)".

குறிப்பு.—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை:**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையில் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ் வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதியின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழினுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

......................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ———.

   (ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்.
   முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ———.

2. தேசிய இனம் : ———.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் : ———.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ———.
   ..........வருடங்கள் ........மாதங்கள்......நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி : ———.

5. பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பக்காரர் : ———.
   (ஆ) அவரது பிதா : ———.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ———.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ———.

   (விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா ? : ———.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ———.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. .................. | .......... | .......... | 1. .................. | .......... | .......... |
| 2. .................. | .......... | .......... | 2. .................. | .......... | .......... |
| 3. .................. | .......... | .......... | 3. .................. | .......... | .......... |
| 4. .................. | .......... | .......... | 4. .................. | .......... | .......... |
| 5. .................. | .......... | .......... | 5. .................. | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் : ————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.
(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளேயும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—
(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.
(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக சம்பள அளவுத் திட்டமும் : ————.
(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு எதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### எந்திரம் இயக்குநர் பதவி (விலங்கு நோயகற்றத் திணைக்களம்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் கொழும்பு மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

2. **வேதனம் :** இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூபா 1,620—16 × 120—ரூபா 3,540. வருடாந்தம் ரூபா 2,700 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள் :**—(அ) வயது 1.11.66 ல் 35 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வருவனவற்றுள் ஒன்றில் பரீட்சார்த்திகள் சித்தியடைந்திருக்கவேண்டும்.

(1) பௌதிகவியல், இரசாயனம், தூய கணிதம் ஆகியவை பாடங்களாகக் கொண்ட சி. பா. த. ப. ; அல்லது

(2) சிங்களம் அல்லது தமிழ், தூயகணிதம், பௌதிகவியல், இரசாயனம் ஆகிய பாடங்கள் உட்பட இரண்டு தடவைகளுக்கு அதிகரியாது தோற்றி, 6 பாடங்களில் சித்தியடைந்த பொதுக்கல்விச்சான்றிதழ் (சாதாரண தரம்) ;

(3) இலங்கை தொழில் சட்டக் கல்லூரியால் விநியோகிக்கப்பட்ட வேலையாளத்துவப் பயிற்சிச் சான்றிதழ் **அல்லது** அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் அல்லது அரசாங்க எந்திரியத் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிலையம் எதிலும் குறைந்தது 2 வருட வேலையாளத்துவப்பயிற்சி, பரீட்சார்த்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, உள்ளூர் ஆட்சிச்சேவையிலுள்ள பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1.11.66 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்களை குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 2 ந் வ.

10-471—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் 3, பழுதுபார்ப்பவர்/சாரதி பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதன அடிப்படை வருமாறு :—வருடாந்தம் ரூபா 918—13 × 42—ரூபா 1,464. வருடாந்தம் ரூபா 1,296 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**—

(அ) வயது : 1.11.66 ல் 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரர்கள் சிங்களத்தில்/தமிழில் 7 ம் வகுப்புச் சித்தியடைந்திருப்பதுடன் வேலைபற்றிய ஆங்கில அறிவும் பெற்றிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் வேலைத் தளத்தில் அல்லது மின்பலநிலையத்தல் குறைந்தது 5 வருடங்களுக்காகுதல் பொருத்துபவர்களாக அல்லது எந்திரம் பழுதுபார்ப்பவர்களாக வேலை செய்திருக்க வேண்டும் அல்லது அக்காலப்பகுதியில், அப்பதவி வகுத்தவர்களாக, வினியோகக் கையேற்புகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் இரண்டும் நான்கும் "ஸ்ட்ரோக் டீசல் எந்திரத்தின்" வேலைக் கோட்பாடுகள் இயங்கும் முறை பற்றிய சமாரான அறிவுபெற்றிருப்பதுடன், சேர்ந்தோடும் எந்திரங்கள் உட்பட, வேண்டிய பழுதுகளைப் பார்க்கும் திறமையும் பெற்றிருக்க வேண்டும். அனுபவத்தை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்ப் பிரதியும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் 4 வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 1966 ம் ஆண்டு 1.11.66 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களுடன் பிறப்புச் சான்றிதழ் ஏனைய சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் (மூலம் அல்ல) இணைக்கப்பட வேண்டும். இவை இல்லாது வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும், உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகார சபைத் தலைவருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

7. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பபத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வசிக்கவேண்டும்.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு 1.
1966 ம் ௵ செத்தெம்பர் மீ 29 ந் வ.

10-452—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### பொது சுகாதார தாதி பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இடமாற்றப்படத்தக்கவராவர்.

(2) **வேதனம்.**—1. கீழ்க்கண்ட 3(1) பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய, பயிற்றப்பட்ட பொதுசுகாதார தாதிகளுக்குப் பொருந்தும் இப்பதவிக்குரிய வருடாந்த வேதனம் வருமாறு : ரூ. 2,220—10 × 120—ரூ. 3,420. வருடாந்தம் ரூ. 2,820 பெறுமுன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையுண்டு.

2. கீழ்க்கண்ட 3(2), (3) ம் பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய தாதிகளுக்குப் பொருந்தும் வேதனம் வருமாறு :—1,320—12 × 72—ரூ. 2,184. வருடாந்தம் ரூ. 1,608 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் அவர்களது தத்தம் தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்றமாதிரி, உரியவேதன அடிப்படையில் அமர்த்தப்படலாம்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—

(1) பொதுதாதி சான்றிதழ், மருத்துவிச்சி சான்றிதழ், பொது சுகாதார தாதி சான்றிதழ், அல்லது

(2) பொது தாதி சான்றிதழ், மருத்துவிச்சி சான்றிதழ், அல்லது

(3) பொதுதாதி சான்றிதழ்.
(சான்றிதழ் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்).

4. பரீட்சார்த்தி நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களினால் இலவச கோலவுடை கொடுக்கப்படும். அவர்கள் அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் நகர எல்லைக்குள் வசிக்க வேண்டும்.

5. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 1966 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட இப்படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாகப் (விசேட தகைமைகள்) பின்வருபவை இடப்படவேண்டும்.

(1) தாதித் தொழில் சம்பந்தமாகப் பெற்ற தகைமைகள் பற்றிய விபரங்கள்,

(2) பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதியா ?

(3) மருத்துவிச்சித் தொழில் பயிற்சி பெறப்பட்டதா ?

7. விண்ணப்பம் காணமற்போய்விட்டது அல்லது தபாலில் தாமதமாகிவிட்டது என்ற எந்தக் குற்றச்சாட்டும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. கடைசித்தினம் வரைக்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தாமே தமது நலனை இழப்பவராவார்கள்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை தலைவருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக் கூடாது.

9. பிறப்புச் சான்றிதழ் பிரதி, வேண்டப்பட்ட தாதிச்சான்றிதழ் ஆகியவை இல்லாது வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

11. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பத்திரம் கிடைத்தமை பற்றி முடிவு திகதிக்குப்பின் 2 வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ௵ ஒக்டோபர் மீ 2 ந் வ.

10-432—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூராட்சிச் சேவை

**தரம் 4, செயலாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை, 10.5.66**

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம், கீழ்க்கண்ட பெயருடைய பரீட்சார்த்தி அவரது பெயருக்கு எதிராகக் காணப்படும் பாடத்தில் சித்தியடைந்துள்ளார் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | உள்ளூராட்சி மன்றம் | சித்தியடைந்த பாடம் |
|---|---|---|
| 1. டி. ரி. ஜெயசிங்ஹ | திஸமகாராம | உள்ளூர் ஆட்சிக் கணக்குகள் |

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உ.ஆ.சே.அ.ச.

த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒக்றோபர் மீ 3 ந் உ.

10-461—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## உள்ளூராட்சிச் சேவை

சுருக்குத் தட்டெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான பதவி உறுதிப்படுத்துதற் சோதனை (ஆங்கிலம்) 9.11.1964 இன் டி 99 ம் இலக்கச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், மேற்படி சோதனையில் " சிங்களம் " தாளினின்று பின்வரும் பரீட்சார்த்தி தவிர்க்கப்பட்டுள்ளார் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

*எச். டி. த சில்வா,
ஆங்கிலச் சுருக்குத் தட்டெழுத்தாளர்,
கொழும்பு மா. ந. ச.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

*சோதனையைப் பூர்த்தி செய்கிறார்.

த. பெ. 530, கொழும்பு 1,
3.10.1966.

10-460—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

# துணைவிதிகள்

எல். டி. பி.

## மட்டக்களப்பு நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் மட்டக்களப்பு நகர சபையால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணை விதி.

ஈ.ஜீ.குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 26.9.1966.

**துணைவிதி**

1963, மார்ச்சு 15 ன் 13,564 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் பற்றியதுணை விதிகள், " சலவைக் கூடம் வைத்து நடத்தல் " என்பவை நேரடுத்துச் " சீமெந்து சேகரித்து வைத்தல் " என்னும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

10-459—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

ஆர். ஸி.—ஸி. 22/50.

## தெல்தெனியாப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் தெல்தெனியாப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1966 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 20 ந் உ.

**துணைவிதி**

இதன்கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வளவுகள் (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) பிரிவின் கீழ் அறவிடப்படும் 1966 ம் ஆண்டுக்குரிய விசேஷத் தண்ணீர் வரியிலிருந்து தவிர்க்கப்பட வேண்டும்.

**அட்டவணை**

பின்வரும் மதிப்பீட்டு இலக்கங்களை உடைய வளவுகள் :—

**4 ம் வட்டாரம்**

கண்டி வீதி : 8.
உருகலை வீதி : 60.

**5 ம் வட்டாரம்**

இரங்கலை/வீதி : இல. 84, 88, 88/1, 88/3, 88/5, 108/2, 104/4.
உருகலை/வீதி : இல. 21, 21/2, 21/3, 21/4, 21/6, 79, 79/1, 79/2, 79/3, 79/4, 79/5, 85, 85/1, 85/2,85/5.

10-458—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

ஆர். ஸி.—ஸி. 72/47

## பெலியத்தைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் பெலியத்தைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 20 ந் உ.

**துணைவிதி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டு, 1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் தேதியைக் கொண்டதும் 1966 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3 ந் தேதிய 14,653 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலிற் குறிப்பிடப்பட்டுள்ள 1966 ம் ஆண்டுக்குரிய விசேட தண்ணீர் வரியிலிருந்து இதற்குள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வளவுகளுக்கு விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

பின்வரும் மதிப்பீட்டு இலக்கங்களை உடைய வளவுகள் :—

**1 ம் வட்டாரம்**

அரன்வெலை வீதி : இல. 9/5, 9/7, 9/8, 9/11, 9/12, 9/13, 9/14, 9/15, 9/16, 29, 31.

வலஸ்முல்லை வீதி : இல. 100, 100/2, 100/3, 100/4, 114, 114/2, 114/3, 114/4, 126, 126/1, 126/3, 132, 132/2, 136, 138, 138/2.

2 ம் வட்டாரம்

அரன்வேலை வீதி : இல. 28, 28/1, 40/4, 40/5, 46/2, 46/3, 50, 50/1, 56, 56/1, 56/2, 64, 66, 66/1, 66/2, 66/5, 66/6, 66/8, 66/9, 66/10, 66/11.

துனுவத்துக்கொடெல்லை வீதி : இல. 9, 15, 19, 19/1, 19/3, 19/7, 19/9, 19/10, 19/11, 19/14, 19/15, 19/16, 19/18, 10, 16, 18, 28, 28/1, 32, 32/1.

இலுக்குமுல்லை வீதி : இல. 20, 22, 32, 46.

பலுவத்தை வீதி : இல. 11, 11/1, 19, 21, 23, 25/5, 6/1, 6/3, 6/4, 6/5, 8, 10, 12, 14, 18, 18/1, 20, 22, 24, 26, 26/1.

தங்காலை வீதி : இல. 109, 109/1.

வின்சென்ட் வீதி : இல. 24/3, 24/4, 24/5, 24/6, 34.

வீரசிங்க வீதி : இல. 29/3, 29/4, 29/5, 29/7, 31, 41, 47, 51, 57, 59/2, 59/3, 63, 63/1, 63/2, 63/3, 63/4, 63/5, 63/6,

3 ம் வட்டாரம்

டிக்வெல்ல வீதி : இல. 69/3, 69/4, 69/5, 69/6, 69/7, 69/8, 89/13, 89/16, 89/20, 89/21, 89/22, 89/23, 89/24 89/28, 89/29, 89/32, 89/34.

தங்காலை வீதி : இல. 118/2, 118/3, 118/5, 118/5ஏ, 118/5பி, 118/5சி, 118/5டி, 118/5இ, 118/6, 118/7, 118/8, 118/8ஏ, 138/7.

4 ம் வட்டாரம்

டிக்வெல்லை வீதி : இல. 161, 161/1, 163, 163/1, 74, 74/3-4 74/8, 156, 158, 158/1, 172, 178.

கெற்றமென வீதி : இல. 29/1, 29/2, 29/3, 29/4, 37, 43, 45, 45/8, 45/9, 45/10, 45/12, 45/13, 49.

யுல்கெற்றியா வீதி : இல. 8/3, 8/3ஏ, 8/4, 8/5, 8/6, 18, 24, 24/1, 24/2, 24/3, 24/4, 26, 30, 30/1, 30/2, 30/3, 36, 36/1, 36/2, 42, 42/1, 44, 44ஏ, 44/1, 44/2, 44/3, 44/4, 50, 50/1.

கொற்றிகொடெல்ல வீதி : இல. 8, 10, 16, 16/2, 16/4, 16/8.

5 ம் வட்டாரம்

டிக்வெல்லை வீதி : இல. 44/3, 44/4, 44/5, 44/6, 44/7.

கெற்றமன வீதி : இல. 16/4, 16/5, 16/6, 16/7, 16/8, 16/11, 16/12, 16/15, 26, 26/5, 26/6, 32/1, 40, 40/1.

கக்மனே வீதி : இல. 113.

கம்புஸ்சாவெலை வீதி : இல. 15, 15/2, 12, 16, 18, 18/1, 22 28, 28/4, 28/5, 32, 36, 36/3, 42, 42/1, 46, 46/2.

6 ம் வட்டாரம்

தெவுந்தரக்கொடை வீதி : இல. 3, 17, 19, 29.

கக்மனே வீதி : இல. 72/10, 86/5, 86/6.

10-457—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமசசபைகள சட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் மன்னூர் மாவட்டத்து, எருக்கலம்பிட்டிக் கிராமபபிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உடபிரிவின்கீழ் உள்ளூராட்சி யமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 26 ந் உ.

### துணைவிதி

விரும்பத்தகாதவையும் அபாயகரமானவையுமான தொழில்கள்

1964 ம் ஆண்டு சனவரி மாதம் 17 ம் தேதிய 13,924 ம் இலக்கக் கெசற்றில் பிரசுரிக்கப்பட்ட விரும்பத்தகாதவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் சம்பந்தமான உபவிதிகள், (4) ம் விஷயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விஷயத்தைச சேர்த்தல்மூலம் அவற்றின (3) ம் பந்தியில் இதனுல் திருத்தப்படுகின்றன :—

"(5) அரிசி ஆலையொன்று வைத்தல்".

10-444—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியுள்ள, (257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின், 42 ஆம் பிரிவின் கீழ், மன்னூர் மாவட்டத்து வங்காலைக் கிராமப் பிரதேசத்துக் கிராமசபையினுல் ஆக்கப்பட்டு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவால் உள்ளூராட்சியமைச்சருக்கு உரிதாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ந் ஆண்டு செப்டெம்பர் மீ 26 ந் உ.

### துணைவிதிகள்

அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள்—

1. கீழ்க்காணும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படும் :—

பதனிட்ட மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்.
மொத்த வியாபாரத்தின் பொருட்டு, கெடக்கூடிய ஆகார பதார்த்தங்களைச் சேகரித்து வைத்தல.
பசளை அல்லது செயற்கை உரம் தயாரித்தல்.
விளுகிரி தயாரித்தல்.
சவர்க்காரம் செய்தல்.
தோல் பதனிடும்சாலை வைத்திருத்தல்.
பாக்குப் பாடம் பண்ணுதல்.
இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல்.
தோல் சேகரித்து வைத்தல்.
எலும்பு சேகரித்து வைத்தல்.
மீனுக்கு ஐஸ் போடுதல்.
பல்கை பாடம் பண்ணுதல்.
ஷீட் அல்லது கிறேப் ரப்பர் புகையிடுதல் அல்லது தயாரித்தல்.
செயற்கை உரத்தை அல்லது செயற்கை உரம் செய்வதற்கு உபயோகிக்கும் பொருட்களை மூன்று மூடைகளுக்கு அதிகமான அளவில் சேகரித்து வைத்தல்.
கோடாக்காய்ச்சுதல்.
புகையிலை பதனிடுதல் அல்லது உலர்த்தல்.
சுருட்டுச் சுற்றுதல்.
பாணி காய்ச்சுதல்.
கள் சேகரிக்கும் நிலையம் வைத்திருத்தல்.
பீடி தயாரித்தல்.

2. கீழ்க்காணும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படும் :—

கொப்பரும் தயாரித்தல்.
செம்பாறுங்கல், மக்கிக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல்.
கொப்பரு சேகரித்து வைத்தல்.
வைக்கோல் சேகரித்து வைத்தல்.
தேங்காய்த்துருவல தயாரித்தல்.
மின்னரம் பதனிடுதல் அல்லது சேகரித்து வைத்தல்.
குழிவெட்டி முதிரைக்கல் தோண்டுதல்.
இயந்திரத்திஞல் தேங்காய் எண்ணெ தயாரித்தல்.
செக்கிஞல் தேங்காய் எண்ணெ தயாரித்தல்.

புல் எண்ணெ தயாரித்தல்.
கறுவாத் தைலம் தயாரித்தல்.
தும்பு தயாரித்தல் அல்லது சேகரித்து வைத்தல்.
பருத்திப்பஞ்சு சேகரித்து வைத்தல்.
வெட்டுமரக்கடை அல்லது விறகுக்கடை வைத்திருத்தல்.
ஆபரணங்கள் செய்தல்.
கொல்லுலை வைத்திருத்தல்.
அச்சகம் வைத்திருத்தல்.
தேயிலை உற்பத்திச்சாலை வைத்திருத்தல்.
பிராணவாயு பாவிக்கும் கொல்லுலையுள்ள ஒரு தொழில்.
அரிசி ஆலை அல்லது மா ஆலை வைத்திருத்தல்.
கம்மாலை வைத்திருத்தல்.

3. கீழ்க்காணும் தொழில்கள் அருவருப்பானவையும், அபாயகரமானவையுமான தொழில்களாகக் கருதப்படும் :—

தும்புக்குச் சாயம் ஏற்றுதல்.
செங்கல் அல்லது ஓடு சுடுதல்.
மின் தாங்கிகளுக்கு மின் சக்தியேற்றுதல்.

சுண்ணாம்பு சுடுதல், சேகரித்து வைத்தல், பதப்படுத்துதல் அல்லது தகர்த்தல்.

தேங்காய் மட்டைகள் ஊறப்போடுவதற்கு அடைப்பு வைத்திருத்தல்.
காற்றடைத்த பானம் உற்பத்திசெய்தல்.

10–435—14.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,717

---

எல்.டீ.பி. 58/52

எல்.ஜி.டி.ஜி. ஐ. 9/4.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம பிரிவின் கீழ் மாத்தளை மாவட்டத்திலுள்ள கொகன்பியப்பற்றுக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தர செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 26 ந் உ.

### துணைவிதி

1956, ஒகத்து 17 ன் 10,962 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் கொகன்பியப்பற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகளின் 28 ம் பாகத்தில் காணப்படும் தண்ணீர் வழங்குவது சம்பந்தமான துணைவிதிகள் (ஆ) பந்தியை நீக்குதல் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் அவற்றின் 2 ம் துணைவிதியில் இத்தால் திருத்தப்படுகின்றன :—

"(இ) எந்த அளவிலாயினும் அல்லது எந்த விதத்திலாயினும் தண்ணீரை வீணாக்கக்கூடிய வகையில் ஒரு தனிப்பட்ட சேவைக் குழாயிலிருந்து எவரும் தண்ணீர் எடுக்கக்கூடாது."

10–427—14.10.66 ந் திகதிய வத்தமானி இல. 14,717

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | ... | 19. 8.66 | வெள்ளி | .. | 12. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26. 8.66 | வெள்ளி | .. | 19. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** | ... | 2. 9.66 | வெள்ளி | .. | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 9. 9.66 | வெள்ளி | .. | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 16. 9.66 | வெள்ளி | .. | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 23. 9.66 | வெள்ளி | .. | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 30. 9.66 | வெள்ளி | .. | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒக்ரோபர்** | ... | 7.10.66 | வெள்ளி | .. | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 14.10.66 | வெள்ளி | .. | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 20.10.66 | வியாழன் | .. | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 27.10.66 | வியாழன் | .. | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **நவெம்பர்** | ... | 3.11.66 | வியாழன் | .. | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | | 10.11.66 | வியாழன் | .. | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | | 18.11.66 | வெள்ளி | .. | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | | 25.11.66 | வெள்ளி | .. | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| **திசெம்பர்** | ... | 2.12.66 | வெள்ளி | .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | | 9.12.66 | வெள்ளி | .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 16.12.66 | வெள்ளி | .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | | 23.12.66 | வெள்ளி | .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 30.12.66 | வெள்ளி | .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
**1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.**

**பேர்னுட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல்
உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.